**20.03.2020**

## பத்திரிக்கை செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸை தடுப்பதற்காக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தமிழக அரசின் சுகாதாரத் துறையுடன் இணைந்து, திருமங்கலம், விமான நிலையம், ஆலந்தூர், வடபழனி, கோயம்பேடு, எழும்பூர் மெட்ரோ மற்றும் சென்ட்ரல் மெட்ரோ ஆகிய 7 மெட்ரோ இரயில் நிலையங்களில் இன்று (20.03.2020) காலை 8 மணி முதல் 11 மணி வரை கொரோனா வைரஸ் தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஏறக்குறைய 5500 பயணிகளுக்கு கை சுத்திகரிப்பான் வழங்கப்பட்டு, கொரோனா வைரஸ் தடுப்பு விழிப்புணர்வுத் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்த விழிப்புணர்வுப் பணி மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையும் நடத்தப்படவுள்ளது.